இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 250 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 07 – ஞாயிற்றுக்கிழமை 20 ஏப்ரல் 2025 – மதுரை 16 பக்கங்கள்    Established : 10.8.1942 - Volume : 83 - Issue 250 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 07 - Sunday 20 April 2025 - Madurai 16 Pages ₹ 5.00

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் குலத்தொழில் திட்டத்தைத் தவிர்ப்பதற்காக;

## ‘திராவிட மாடல்’ அரசு கொண்டு வந்துள்ள சமூக நீதித் திட்டமான

# ‘கலைஞர் கைவினைத் திட்டம்’ காலத்தின் வெற்றி!

## குன்றத்தூரில் நடைபெற்ற தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.4.2025) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞர் கைவினைத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வப்பெருந்தகை, எஸ்.எஸ். பாலாஜி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், எம். பாபு, இ. கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர் கி. வீரராகவ ராவ், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**குன்றத்தூர், ஏப். 20-**

**“ஒன்றிய பா.ஜ.க. அரசின் குலத்தொழில் திட்டத்தைத் தவிர்ப்பதற்காக; ‘திராவிட மாடல்’ அரசு கொண்டு வந்துள்ள சமூக நீதித் திட்டமான கலைஞர் கைவினைத் திட்டம் காலத்தின் வெற்றி. திராவிட இயக்கத்தின் வெற்றி” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குன்றத்தூரில் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றும்போது பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.4.2025) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞர் கைவினைத் திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கைவினைக் கலைஞர்களின் சமூக - பொருளாதார மேம்பாட்டிற்காக, இன்று நாம் தொடங்கி வைக்க இருக்கக்கூடிய இந்த ‘கலைஞர் கைவினைத் திட்டம்’ என்பது, சமூகநீதியை சமநீதியை மனித நீதியை மனித உரிமை நீதியை நிலைநாட்டக்கூடிய திட்டம்!

இந்தத் திட்டத்தின் சிறப்புகளைச் சொல்வதற்கு முன்னே, ஏன் இந்தத் திட்டத்தை உருவாக்கினோம் என்ற அரசியல் பின்னணியை நான் சொல்ல விரும்புகிறேன்...

### குலத்தொழிலை ஒன்றிய அரசு ஊக்குவிக்கிறது!

ஒன்றியத்தை ஆளக்கூடிய பா.ஜ.க. அரசு கடந்த 2023ஆம் ஆண்டு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் பெயர் என்ன தெரியுமா? “விஸ்வகர்மா திட்டம்!” 18 வகையான கைவினைக் கலைஞர்களுக்கு, திறன் பயிற்சி வழங்கி, மூன்று இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கும் திட்டம் என்று சொன்னார்கள். நம்மைப் பொறுத்தவரைக்கும், எந்தத் திட்டமாக இருந்தாலும், அது சமூகநீதியை, சமத்துவத்தை நிலைநாட்டுகின்ற நோக்கத்துடன் இருக்க வேண்டும். ஆனால், அந்த ‘விஸ்வகர்மா திட்டம்’ அப்படியான திட்டம் இல்லை. அதை முதலில் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்தத் திட்டத்தின்கீழ் ஒருவர் பயன்பெற வேண்டும் என்றால், அந்த விண்ணப்பதாரர், அவருடைய குடும்பம் காலங்காலமாக செய்து கொண்டு வருகின்ற தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டு இருந்தது. இது சாதியப் பாகுபாடுகளை, குலத்தொழில் முறையை வெளிப்படையாகவே ஊக்குவிக்கிறது என்று சொல்லி நாம் கடுமையாக எதிர்த்தோம்.

அதுமட்டுமல்ல, விண்ணப்பித்தவர்களுக்கான குறைந்தபட்ச வயது 18 என்று நிர்ணயிக்கப்பட்டு இருந்ததைப் பார்த்து எனக்கு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் உண்டானது. 18 வயது என்பது ஒரு மாணவர் உயர்கல்விக்காக கல்லூரிக்குச் செல்கின்ற வயதா, இல்லை, குடும்பத் தொழிலையே செய்யவேண்டும் என்று தள்ளிவிடுகின்ற வயதா? படிப்பை விட்டு வெளியே செல்கின்ற மாணவர்களையும் மீண்டும் கல்விச் சாலைக்குள்ளே அழைத்துக் கொண்டு வருவதுதான் ஒரு அரசின் கடமையே தவிர, அவர்களை படிப்பை விட்டு வெளியேற்றுவதும், அதுவும் குடும்பத் தொழிலையே செய்யவேண்டும் என்று சொல்வதும் கிடையாது.

### “நான் முதல்வன்” திட்டம்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், ‘புதுமைப்பெண்’, ‘தமிழ்ப்புதல்வன்’ போன்ற திட்டங்கள் மூலமாக ஸ்கூல் முடித்த எல்லோரும் உயர்கல்விக்குப் போவதை உறுதி செய்ய வேண்டும் என்று நாம் பாடுபடுகிறோம். ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு குலத் தொழிலை ஊக்குவிக்கப் பாடுபடுகிறது. நாம், “நான் முதல்வன்” திட்டத்தில், எதிர்கால உலகத்தை எதிர்கொள்ளத் தேவையான திறன் பயிற்சிகளைக் கொடுத்து, நம்முடைய குழந்தைகள் பெரிய, பெரிய நிறு வனங்களில் உயர் பொறுப்புகளில் வேலை செய்யவேண்டும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், பா.ஜ.க என்ன நினைக்கிறது? குடும்பத் தொழிலில் பயிற்சி கொடுத்து, அவர்கள் வெளி உலகத்தையே பார்க்கக் கூடாது என்று நினைக்கிறது.

### 1950-களிலேயே குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துக் களம் கண்ட தமிழ்நாடு!

அதுவும், சாதிய வேறுபாடுகள் நிறைந்த இந்தியச் சமூகத்தில், இது என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும்? இதை மனசாட்சி உள்ள ஒருவர் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? அதுவும், 1950களிலேயே குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துக் களம் கண்ட தமிழ்நாடு இதை அனுமதிக்குமா? அந்த உணர்வோடுதான், தமிழ்நாடு அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த, மூன்று முக்கிய மாற்றங்களை மேற்கொள்ள வலியுறுத்தி, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதினேன். அதில் நான் குறிப்பிட்டது.....

**முதல் மாற்றம்**

➢ விண்ணப்பதாரரின் குடும்பம் பாரம்பரியத் தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்கின்ற கட்டாய நிபந்தனையை நீக்கி, தகுதியான எந்தத் தொழிலையும் யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்று மாற்றவேண்டும்!

**இரண்டாவது மாற்றம்**

➢ விண்ணப்பிப்பதற்கான குறைந்தபட்ச வயது வரம்பை 18லிருந்து 35ஆக உயர்த்தவேண்டும்!

**மூன்றாவது மாற்றம்**

➢ கிராமப்புறங்களில், பயனாளிகளைச் சரிபார்க்கும் பொறுப்பை கிராம பஞ்சாயத்துத் தலைவர்களிடம் இருந்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மாற்றவேண்டும்!

ஆனால், மிக மிக முக்கியமான இந்த மூன்று மாறுதல்களையும் ஒன்றிய அரசு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

எந்தத் திருத்தமும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதனால்தான், “பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தற்போதைய வடிவத்தில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது” என்று ஒன்றியத்தில் இருக்கக்கூடிய MSME துறையின் அமைச்சருக்கு எழுத்துப்பூர்வமாகவே இதை நாங்கள் தெரிவித்துவிட்டோம்.

### 25 வகையான தொழில்கள் சேர்ப்பு!

அதே நேரத்தில், கைவினைக் கலைஞர்களுடைய வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதிலும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அதற்காக, சாதிய அடிப்படையில், பாகுபாடு காட்டாத ஒரு திட்டத்தை உருவாக்க நாங்கள் முடிவு செய்தோம். அதன்படி உருவானதுதான் இந்த ‘கலைஞர் கைவினைத் திட்டம்’ என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்றிய அரசின் விஸ்வகர்மா திட்டத்தில், 18 தொழில்கள்தான் இருக்கிறது! ஆனால், நம்முடைய கலைஞர் கைவினைத் திட்டத்தில் 25 வகையான தொழில்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஒன்றிய அரசுத் திட்டத்தில், விண்ணப்பதாரர் அவருடைய குடும்பத் தொழிலை மட்டும்தான் பார்க்க முடியும். ஆனால், நம்முடைய திட்டத்தில் விரும்பிய எந்தத் தொழிலையும் யார் வேண்டுமானாலும் செய்யலாம்.

கலைஞர் கைவினைத் திட்டத்தில் விண்ணப்பிக்க குறைந்தபட்ச வயது 35 ஆக இருக்க வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதனால், கல்லூரிக்குச் செல்கின்ற வயதில், குடும்பத் தொழிலைப் பார்த்தால் போதும் என்று எந்த மாணவரும் நினைக்காமல் இருப்பதை உறுதி செய்திருக்கிறோம்.

இந்தத் திட்டத்தில், 50 ஆயிரம் முதல் 3 இலட்சம் ரூபாய் வரை மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது. விஸ்கர்மா திட்டத்தில் மானியம் கிடையாது. இதுவரை 24 ஆயிரத்து 907 விண்ணப்பங்கள் வந்திருக்கிறது.

வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டு, 8 ஆயிரத்து 951 பயனாளிகளுக்கு 170 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது!

கலைஞர் கைவினைத் திட்டமானது தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து வகை கைவினைக் கலைஞர்களுக்கும் அதிகாரம் அளிக்கின்ற வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. யாரையும் விலக்காமல், சமூகப் பாகுபாடு பார்க்காமல் உருவாக்கப்பட்டிருக்கிறது. “ஆர்வமான கைவினைஞர்கள், விரும்பிய தொழிலைச் செய்யலாம்” என்கின்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம்.

ஒரு காலத்தில், அப்பா பார்த்த தொழிலைத்தான் பிள்ளையும் பார்க்கவேண்டும் என்று குலத்தொழில் முறை இருந்தது. அந்த அடிப்படையில், தொடக்கத்திலேயே நான்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் துறையை சிறப்பாக வளர்த்தெடுக்கிறார்!



**தமிழ்நாடு இன்றைக்கு மாபெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், பெரிய நிறுவனங்களால் மட்டுமே இந்த வளர்ச்சி வந்துவிடவில்லை. சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களாலும்தான் இந்த வளர்ச்சியை நாம் சாத்தியமாக்கி இருக்கிறோம். இந்தத் துறைக்கு பொறுப்பேற்றுள்ள நம்முடைய அருமைச் சகோதரர் தா.மோ. அன்பரசன் அவர்கள் இந்தத் துறையை சிறப்பாக வளர்த்தெடுத்துக் கொண்டு வருகிறார்.**

**கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு MSME நிறுவனங்களை அவர் வளர்த்தெடுத்திருக்கிறார். அவை பெருந்தொழில்களுக்குத் துணையாக இருந்து நாட்டின் ‘இன்க்ளூசிவ்’ மற்றும் ‘ஆல்ரவுண்ட்’ சமூக வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிக்கிறது. உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதால், மக்கள் வேலை தேடி தொலைதூரங்களுக்கு இடம் பெயர்வது பெருமளவு தடுக்கப்படுகிறது.**

---

## உச்சநீதிமன்றத் தீர்ப்பை விமர்சிப்பதற்கு

# குடியரசுத் துணைத் தலைவருக்கு எந்த உரிமையும் இல்லை!

### ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

*சென்னை, ஏப். 20 -*

*தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு, ஆளுநர் ஆர்.என். ரவி கையெழுத்திடாமல் கிடப்பில் போட்டு வைத்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும், தி.மு.க. தலைமையிலான திராவிட மாடல் அரசின் மக்கள் பணிகளுக்கும் இடையூறாக செயல்பட்டு வந்த ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.*

*இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஆளுநர் ஆர்.என். ரவி, சட்டத்திற்கு புறம்பாக செயல்படுகிறார் என தெரிவித்ததுடன், தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளித்து சட்டமாக்கியது. மேலும், ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள் சட்டத்துக்கு முரணானது என நீதிபதிகள் தெரிவித்தனர்.*

*இந்த நிலையில், ஆளுநருக்கு எதிரான தீர்ப்பு குறித்து, குடியரசுத் துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் விமர்சித்தார்.*

*இதற்கு கண்டனம் தெரிவித்து தலையங்கம் எழுதியுள்ள டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளேடு, ஆளுநர் வழக்கின் தீர்ப்பை விமர்சிக்க குடியரசு துணைத் தலைவருக்கு எந்த உரிமையும் இல்லை என தெரிவித்துள்ளது. குடியரசுத் துணை தலைவர் என்பவர், மாநிலங்களவையை நடத்தும் தலைவராகவும் உள்ளார் என்றும், எனவே அரசின் கொள்கை, அரசியல் மற்றும் நீதித்துறை தீர்ப்புகள் விவகாரங்களில் கருத்து கூற எந்த உரிமையும் இல்லை என்றும் தெளிவுபடுத்தி உள்ளது.*

*குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், ஆளுநர்கள் ஆகியோர் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்றும் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு அறிவுறுத்தியுள்ளது.*

---

## நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்துடன் இணைந்து

# இஸ்ரோ புதிய ஆய்வுகளை மேற்கொள்ள திட்டம்!

புதுடெல்லி, ஏப். 20 –

இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ நிலவுக்கு மனிதனை அனுப்பவும், சூரியனை ஆய்வு செய்யவும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இஸ்ரோ, ஆக்ஸிம்4 என்ற தனியார் நிறுவனத்துடன் இணைந்து புதிய முயற்சியில் இறங்கி உள்ளது.

இந்த திட்டத்தில், அமெரிக்காவின் நாசா, ஐரோப்பிய விண்வெளி முகமையான இ.எஸ்.ஏ. ஆகியோருடன் இஸ்ரோ கைகோர்த்துள்ளது.

இதற்காக, 60 முதல் 70 மில்லியன் டாலர் வழங்க உள்ளது. அதாவது இந்திய ரூபாய் மதிப்பில், 500 கோடி எனக் கூறப்படுகிறது.

இதனிடையே, இந்தியாவைச் சேர்ந்த சுபான்சு சுக்லா வரும் மே மாதம் சர்வதேச விண்வெளி மையத்திற்கு பயணம் மேற்கொள்ள உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த விமானப்படை வீரரான சுபான்சு சுக்லாவை, விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்காக இஸ்ரோ தேர்வு செய்தது. கடந்த 2019 முதல் ரஷ்யாவில் உள்ள யூரிகாகரின் விண்வெளி மையத்தில் பயிற்சி பெற்று வரும் சுபான்சு சுக்லாவை, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா டிராகன் விண்கலத்தில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைக்க தேர்வு செய்துள்ளது.

இந்த விண்கலத்தின் கமாண்டராக நாசா முன்னாள் விண்வெளிவீரர் பெகி விட்சல் செல்கிறார். இவருடன் சுபான்சு சுக்லா உள்ளிட்ட 3 பேர் வரும் மே மாதம் பயணம் மேற்கொள்ள உள்ளனர்.